ஐ.வி.டி.பி. மலர்

(Regd. No. 69/79)

✦ மொட்டு 23 ✦ மலர் 51 ✦ ஏப்ரல் - செப்டம்பர் 2026 (தனிச்சுற்றுக்கு மட்டும்)

மகளிர் சுய உதவிக் குழு புத்துணர்ச்சி இதழ்

காலங்கள் கடந்தாலும் சாதனைகள் தொடரும்!!!



80 நிறுவனர் தின விழா

உங்களின் ஒருவனாக...

குழந்தை பிரான்சிஸ்



நிறுவனர் இதயத்திலிருந்து...

அன்பும் நம்பிக்கையும் நிறைந்த என் மக்களுக்காக!

அன்புள்ளம் கொண்ட

ஊக்குநர்களே! உறுப்பினர்களே!

அனைவருக்கும் எனது இதயம் கனிந்த வணக்கங்களும்! வாழ்த்துகளும்!

ஒரு மனிதனின் வாழ்க்கை என்பது அவன் தனக்காக வாழ்ந்த நாட்களால் மட்டும் அளவிடப்படுவதில்லை. அவன் பிறருடைய வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றங்களால் தான் அளவிடப்படுகிறது. அந்த வகையில், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக எண்ணற்ற ஏழை, எளிய மக்களின் வாழ்வில் நம்பிக்கையின் ஒளியேற்றி, அவர்களின் கனவுகளுக்குச் சிறகளித்து வரும் நமது நிறுவனத்தின் பயணத்தை நினைத்துப் பார்க்கும் போது என் மனம் நெகிழ்ச்சியாலும் பெருமிதத்தாலும் நிறைகிறது.

ஒரு சிறிய முயற்சியாகத் தொடங்கிய நமது மக்கள் பணி, இன்று ஆயிரக்கணக்கான பெண்களின் தன்னம்பிக்கையாகவும், குடும்பங்களின் பொருளாதாரப் பாதுகாப்பாகவும், மாணவர்களின் கல்விக் கனவுகளுக்கு உறுதுணையாகவும், நோயால் துன்புறும் மக்களுக்கு வாழ்வளிக்கும் நம்பிக்கையாகவும் வளர்ந்துள்ளது.

உயிரைக் காப்பதே உயர்ந்த சேவை! என்ற வகையில் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு, ஆரம்பநிலைப் பரிசோதனைகள் மற்றும் தேவையுள்ள உறுப்பினர்களுக்கு இலவச உயர் சிகிச்சை வழங்கும் பணிகள் எனது இதயத்திற்கு மிகவும் நெருக்கமானவை. இதுவரை இத்திட்டத்திற்காக மட்டும் **₹ 15.41 கோடி** செலவிடப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, தையல் பயிற்சி, கணினிப் பயிற்சி, ஆரி வேலைப்பாடு உள்ளிட்ட தொழிற்பயிற்சிகள் மூலம் பெண்களின் திறன்களை வளர்த்து, அவர்களைச் சுயதொழில் முனைவோராக உருவாக்குவதிலும் நாம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம். இப்பயிற்சி வகுப்புகள் மூலம் இதுவரை **1534** உறுப்பினர்களும் அவர்களது பெண் குழந்தைகளும் பயனடைந்துள்ளனர்.

இப்பயிற்சி வகுப்புகளுக்காக இதுவரை **₹ 35.09 இலட்சம்** செலவிடப்பட்டுள்ளது.

தவறாமல் படிக்கவும்...
ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின்
முக்கிய கவனத்திற்கு
பக்கம் எண் : **12** முதல் **21** வரை

மேலும் இதுவரை உறுப்பினர்கள் தங்களது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில்,

வங்கிக் கடன் ₹	10,508.40 கோடி
சங்கக் கடன் ₹	5,523.17 கோடி
ஐ.வி.டி.பி கடன் ₹	585.56 கோடி
சுகாதாரக் கடன் ₹	303.41 கோடி
என மொத்தம் ₹	16,918.54 கோடி

கடன் சுழற்சி மேற்கொள்ளப்பட்டு, உறுப்பினர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த நிதியாண்டும் குழுக்களின் தேவைகளையும், செயல்பாட்டுத் திறனையும் மதிப்பீடு செய்து, வங்கிக்கடன் இலக்கு ₹ 1640 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வறுமையின் காரணமாக எந்தக் குழந்தையின் கல்வியும் தடைபடக் கூடாது என்ற எண்ணத்தில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள் மற்றும் பல்வேறு கல்வி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியும், கோசலை விருதுகள் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர் குழந்தைகளின் கல்விச் சாதனைகளை அங்கீகரித்து ஊக்குவிப்பதும், பெற்றோரை இழந்த மற்றும் விதவை உறுப்பினர்களின் குழந்தைகளின் உயர்கல்விக் கனவுகளுக்கு ஆதரவளிப்பதும் நமது கல்விப் பணியின் முக்கிய நோக்கங்களாகும். இக்கல்விப் பணிக்காக மட்டும் இதுவரை ₹ 54.15 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நமது ஐ.வி.டி.பி நிறுவனத்தின் அனைத்து சேவைகளும் உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாடு மட்டுமின்றி, மனிதநேயம், சமூக அக்கறை, சமத்துவம் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகிய உயரிய நோக்கங்களையும் முன்னிறுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை பல்வேறு மனிதநேயப் பணிகளுக்காக மொத்தம் ₹ 187.37 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்தகைய சேவைகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறுவதற்கு உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிகவும் அவசியமாகும். என் வாழ்நாள் முழுவதும் நான் நம்புவது ஒன்றுதான். மனிதர்களை நேசிப்பதும், அவர்களின் துயரத்தில் துணைநிற்பதும், அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதுமே உண்மையான இறைப்பணி.

அந்த உயரிய நோக்கத்தோடு நமது ஐ.வி.டி.பி மக்கள் பணி என்றும் தொடரும்!

மனிதநேயத்துடன் மக்களின் வாழ்வில் மாற்றத்தை உருவாக்குவோம்!

என்றும் உங்களுடன்,

"இராமன் மகசேசே"
குழந்தை பிரான்சிஸ்
நிறுவனர் / தலைவர்



ஐ.வி.டி.பி நிறுவனத்தின் 80வது நிறுவனர் தின விழா

₹ 23.15 இலட்சம்



ஐ.வி.டி.பி நிறுவனரின் உழைப்பால் உயர்ந்து, திறமையால் சிறந்து, பலரின் வாழ்வில் ஒளியேற்றி, மக்கள் பணியில் அரை நூற்றாண்டைக் கடந்து வெற்றி நடை போட்டு வரும் **ஐ.வி.டி.பி நிறுவனத்தின் 80-வது நிறுவனர் தின விழா 10.09.2026 அன்று கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.**

இவ்விழாவினை முன்னிட்டு, நிறுவனத்தில் சிறப்பாகப் பணியாற்றிய பணியாளர்களைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு பரிசுத்தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இவ்வகையில் வழங்கப்பட்ட மொத்த ஊக்கத்தொகையின் **மதிப்பு ₹ 23.15 இலட்சம்.**





நிறுவனத்தில் பணிபுரியும் 350 பணியாளர்களுக்கு சீருடைகள்	₹ 1.57 இலட்சம்.
நிறுவனத்தில் சிறப்பாகப் பணியாற்றிய பணியாளர்களுக்கு ஊக்கத்தொகைகள்	₹ 9.50 இலட்சம்.
நிறுவனத்தில் பணியாற்றி, தங்கள் கணவரை இழந்த 2 பணியாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி	₹ 3 இலட்சம்.
நிறுவனத்தின் 350 பணியாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு உணவு மற்றும் கேக்குகள்	₹ 7.08 இலட்சம்.
ஐ.வி.டி.பி நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் திருமணமாகாத 2 பணியாளர்களுக்கு நிதியுதவி	₹ 2 இலட்சம்.

ஐ.வி.டி.பி பணியாளர்களுக்கான பிற நல உதவிகள்

₹ 5.07 இலட்சம்

ஐ.வி.டி.பி பணியாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை மற்றும் பிற நல உதவிகள் ₹ 5.07 இலட்சம்

இதுவரை ஐ.வி.டி.பி பணியாளர்களின் நலனிற்காக வழங்கப்பட்டத் தொகை ₹ 10.86 கோடி



கோசலை விருது 2026

ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு
உறுப்பினர்களின் 970 குழந்தைகளுக்கு

₹ 1.38 கோடி மதிப்பிலான
மடிக்கணினி மற்றும் தங்கப் பதக்க விருது



ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்குவதையும், அரசுப் பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று உயர்கல்வி வாய்ப்புகளைப் பெறுவதையும் ஊக்குவிக்கும் நோக்கில், ஆண்டுதோறும் ஐ.வி.டி.பி கோசலை விருது வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில் 2026ஆம் ஆண்டிற்கான ஐ.வி.டி.பி கோசலை விருது வழங்கும் விழா, 30.08.2026 அன்று கிருஷ்ணகிரி, ஆர்.சி பாத்திமா ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இவ்விழாவில், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. **இக்கல்வியாண்டில் 970 மாணவ, மாணவியருக்கு, மொத்தம் ₹ 1.38 கோடி மதிப்பிலான கோசலை விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.**



இவ்விழாவில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற 10 மாணவ, மாணவியருக்கு, தலா ₹ **52,213** மதிப்பிலான **மடிக்கணினிகள்** ₹ **5.22 இலட்சம்**

10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வுகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்ற 970 மாணவ, மாணவியரையும் ஊக்குவிக்கும் வகையில், தலா ₹ **13,688** மதிப்பிலான தங்க நாணயங்கள் ₹ **1.33 கோடி**



ஐ.வி.டி.பி நிறுவனத்தின் கோசலை விருதுத் திட்டத்திற்காக இதுவரை மொத்தம் ரூ. 8.49 கோடி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



ஐ.வி.டி.பி. ஊக்குநர்களுடன் அன்பும் அரவணைப்பும் நிறைந்த

ஐவிடிபி நிறுவனரின் சிறப்புச் சந்திப்பு

₹ 24.06 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனத்தின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதிலும், சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஊக்குநர்களை ஊக்குவிப்பதிலும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில், ஐ.வி.டி.பி நிறுவனருக்கும், ஊக்குநர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நிகழ்வு சிறப்பாக இவ்வாண்டு நடைபெற்றது. இந்நிகழ்வு ஊக்குநர்களின் பொறுப்புகளை அங்கீகரித்து, அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், குழு சார்ந்த கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், எதிர்காலச் செயல்பாடுகளை மேலும் சிறப்பாக முன்னெடுக்கவும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

இந்நிகழ்வின் போது, ஐ.வி.டி.பி தலைவர் அவர்கள் ஊக்குநர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, அவர்கள் மேற்கொண்டு வரும் பணிகள், கள அனுபவங்கள், பொறுப்புகள் மற்றும் அன்றாடச் செயல்பாடுகள் குறித்து ஆர்வத்துடன் கேட்டறிந்தார். ஊக்குநர்கள் தங்களது பணியின் போது பெற்ற அனுபவங்களையும், எதிர்கொள்ளும் சவால்களையும், அவற்றைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளையும் பகிர்ந்து கொண்டனர். மேலும் ஊக்குநர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அவர்களின் அனுபவங்களைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களின் பணிகளை மேலும் சிறப்பாக முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கும் இக்கலந்துரையாடல் வழிவகுத்தது.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக, செப்டம்பர் 2026 வரை ஊக்குநர்களின் அர்ப்பணிப்பையும் சேவையையும் பாராட்டும் விதமாக, ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுவைச் சார்ந்த **6433 ஊக்குநர்களுக்கு தலா ரூ.374/-** மதிப்பிலான **தண்ணீர் பாட்டில், இனிப்பு** மற்றும் **கேக்குகளை** வழங்கினார். ஐ.வி.டி.பி யின் நிறுவனத் தலைவர்.

இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 24.06 இலட்சம் ஆகும்.

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான தொழிற்பயிற்சிகள் மற்றும் சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் ₹ 2.38 இலட்சம்

ஐவிடிபி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான

தையற்பயிற்சிகள் மற்றும் ஆரி வேலைப்பாடு

சிறப்புப் பயிற்சி



₹ 1.21 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம், சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழில்திறனை மேம்படுத்தி, அவர்களைச் சுயதொழில் முனைவோராக உருவாக்கும் நோக்கில் பல்வேறு தொழிற்பயிற்சித் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சிகள் மூலம் பெண்கள் தங்களது திறன்களை வளர்த்துக்கொண்டு, சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன், குடும்பத்தின் பொருளாதார நிலையையும் மேம்படுத்தி வருகின்றனர்.





ஐ.வி.டி.பி நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் இதுவரை நடைபெற்ற **30 ஆம் கட்ட அடிப்படைத் தையற்பயிற்சிகளில் மொத்தம் 837 பேர் பயிற்சி பெற்று வெற்றிகரமாக நிறைவு** செய்துள்ளனர்.
தற்போது நடைபெற்று வரும் **31 ஆம் கட்டப் பயிற்சியில் 32 பேர் பயிற்சி** பெற்று வருகின்றனர்.

அதேபோல், **ஆரி வேலைப்பாடு சிறப்புத் தையல் பயிற்சியில்**
இதுவரை 22 கட்டங்களாக 439 பேர் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.
தற்போது நடைபெற்று வரும் **23 ஆம் கட்டப் பயிற்சியில் 21 பேர் பயிற்சி** பெற்று வருகின்றனர்.

ஐவிடிபி சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் பெண் குழந்தைகளுக்கான

கணினிப் பயிற்சி

₹ 1.17 இலட்சம்

தொழில்நுட்ப அறிவின் முக்கியத்துவத்தை உணர்ந்து,
சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது பெண் குழந்தைகளின் கல்வி,
திறன் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு,
ஐ.வி.டி.பி நிறுவனம் கணினிப் பயிற்சித் திட்டத்தையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

ஐ.வி.டி.பி நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் இதுவரை நடைபெற்ற
8 கட்ட அடிப்படைக் கணினிப் பயிற்சிகளில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது
பெண் குழந்தைகள் என மொத்தம் **258 பேர் பயிற்சி** பெற்று வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.
தற்போது நடைபெற்று வரும் 9 ஆம் கட்டப் பயிற்சியில் **19 பேர் பயிற்சி** பெற்று வருகின்றனர்.

தொழிற்பயிற்சி திட்டங்கள்	மார்ச் - 2026 வரை	ஏப்ரல் முதல் செப்டம்பர் 2026 வரை	மொத்தம்
தையற்பயிற்சி மற்றும் ஆரி வேலைப்பாடு சிறப்பு பயிற்சி	₹ 12.62 இலட்சம்	₹ 1.21 இலட்சம்	₹ 13.83 இலட்சம்
கணினிப் பயிற்சி	₹ 20.09 இலட்சம்	₹ 1.17 இலட்சம்	₹ 21.26 இலட்சம்
மொத்தம்	₹ 32.71 இலட்சம்	₹ 2.38 இலட்சம்	₹ 35.09 இலட்சம்

இப்பயிற்சி வகுப்புகளுக்காக இதுவரை நிறுவனம் செலவிட்ட மொத்தத் தொகை ₹ 35.09 இலட்சம் ஆகும்.



ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு

2026–2027 ஆம் ஆண்டிற்கான கடன் இலக்கு ₹ 1,640 கோடி

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழும் மகளிரின் பொருளாதார முன்னேற்றம் ஒன்றையே தலையாயக் குறிக்கோளாகக் கொண்டு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகிறது.

அவ்வகையில் ஒவ்வொரு ஆண்டும் வங்கிகளின் உயர் அதிகாரிகள், ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து, சுய உதவிக் குழுக்களின் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடி, குழுக்களின் தேவைகள், தொழில் வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் கடன் திருப்பிச் செலுத்தும் திறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்து, அந்தந்த ஆண்டிற்கான வங்கிக் கடன் இலக்குகளை நிர்ணயிக்கின்றனர்.



அதன்படி 06.08.2026 அன்று 2026–2027 ஆம் ஆண்டிற்கான **தமிழ்நாடு கிராம வங்கிகளுடனான செயல் திட்டக் கூட்டம் ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்தில்** நடைபெற்றது. தமிழ்நாடு கிராம வங்கிக்கான கூட்டத்தில், வங்கியின் பொது மேலாளர் **திரு. கண்ணன் பொன்னுராமன்** அவர்கள் முன்னிலை வகிக்க, வட்டார மேலாளர் **திரு. கார்த்திகேயன்** அவர்களும், ஐ.வி.டி.பி குழுக்கள் செயல்படும் இடங்களில் உள்ள கிளை மேலாளர்களும் கலந்துக் கொண்டு 8487 **மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ₹ 1,050 கோடி வங்கிக் கடன்** வழங்க இலக்கு நிர்ணயித்தனர்.

TAMIL NADU GRAMA BANK



மேலும் 07.08.2026 அன்று **இந்தியன் வங்கி மேலாளர்களுடன் செயல் திட்டக் கூட்டம்** நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு இந்தியன் வங்கியின் தருமபுரி மண்டல மேலாளர், திரு. **கோவிந்தராஜ்** அவர்களும், இந்தியன் வங்கியின் வேலூர் மண்டல மேலாளர், திரு. **பாலசுப்பிரமணியன்** அவர்களும், முன்னிலை வகிக்க **தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர்** ஆகிய மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கி மேலாளர்களும், ஐ.வி.டி.பி குழுக்கள் செயல்படும் இடங்களில் உள்ள கிளை மேலாளர்களும் கலந்துக் கொண்டு 3109 **ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ₹ 375 கோடி வங்கிக்கடன்** இலக்கு நிர்ணயித்தனர்.

மேலும் **பேங்க் ஆப் இந்தியா, பேங்க் ஆப் பரோடா மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி** போன்ற வங்கிகளில் செயல்படும் 1775 ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ₹ **215 கோடி** வங்கிக்கடன் இலக்கும் நிர்ணயிக்கப்பட்டது. **இவ்வாண்டிற்கான மொத்த வங்கிக் கடன் இலக்கு ₹ 1,640 கோடியாகும்.**

ஐ.வி.டி.பி.யின் பிற நல உதவிகள்

ஐ.வி.டி.பி நிறுவனம், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், ஏழை உறுப்பினர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது. அதனடிப்படையில் பல்வேறு நல உதவிகளை வழங்கி வருகிறது.

₹ 6.52 இலட்சம்

கிருஷ்ணகிரி, அரசு மகளிர் கலைக் கல்லூரியின்
விளையாட்டுத் துறை ஆசிரியருக்கு சம்பளம்
₹ 1.10 இலட்சம்

பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மாணவ, மாணவியருக்கு
கல்வி உதவித்தொகை
₹ 4.36 இலட்சம்

பெற்றோர் இருவரையும் இழந்த
குழந்தைக்கு உடைகள்
₹ 19,811/-

ஐ.வி.டி.பி உறுப்பினர்கள் அல்லாத பிற நபர்களுக்கு நிதியுதவி
₹ 86,891/-



ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான

ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் முகாம்

மற்றும

இலவச புற்றுநோய்

மருத்துவச் சிகிச்சைத் திட்டம்

1. ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவச புற்றுநோய் மருத்துவச் சிகிச்சை திட்டமானது நாட்டின் சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் ஐ.வி.டி.பி. உறுப்பினர்களுக்கு புற்றுநோய் அறிகுறிகள் இருப்பதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து அதற்குரிய சரியான சிகிச்சையை உரிய நேரத்தில் அளித்து உறுப்பினரை புற்றுநோயிலிருந்து காப்பாற்றுவதே ஆகும்.

3. இத்திட்டம் துவங்கப்பட்டு 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், எந்த பிரச்சனையும் இல்லாமல், நோய்க்கான அறிகுறியே இல்லாமல் முகாமில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு கூட, புற்றுநோய் கண்டறியப்பட்டு இலவச சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே உறுப்பினர்கள் காலம் தாழ்த்தாமல், பணியாளர்கள் கட்டாயத்தின் கீழ், முகாமில் கலந்து கொள்வதைத் தவிர்த்து, தாங்களே கலந்துக் கொள்ளாதவர்களைக் கண்டறிந்து, ஆலோசனைக் கூறி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். நோய் முற்றிய நிலையில் கலந்துக் கொள்வதைத் தவிர்த்து, வருமுன் காப்போம் என்பதை கருத்தில் கொண்டு கலந்துக் கொள்ள அறிவுறுத்துகிறோம்.

பரிசோதனைக்கு வருபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

- பரிசோதனைக்கு வரும் போது ஆதார் அட்டை மற்றும் குழுவின் தனிநபர் சேமிப்பு புத்தகம் கொண்டு வருவது அவசியம்.
- பரிசோதனைக்கு வரும்போது சேலை அணிந்து வரவும். மாதவிடாய் காலங்களில் கலந்துக் கொள்ளாமல் ஒரு வாரத்திற்கு பிறகு கலந்துக் கொள்ளவும்.
- பரிசோதனை முகாமில் கலந்து கொள்பவர்கள் 25 வயதிற்கு மேல் 60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பது அவசியம்.
- மாதவிலக்கு நின்றுவிட்டாலும் கூட, 60 வயதிற்குட்பவர்களாக இருந்தால் முகாமில் கலந்துக் கொள்வது அவசியம்.
- ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறியும் முகாம் அனைத்து வேலை நாட்களிலும் கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனையில் நடைபெறுகிறது.

  Screening Time : காலை 9மணி முதல் 12 மணி வரை

  Scan Time : காலை 9மணி முதல் 10 மணி வரை
- பரிசோதனையின்போது உறுப்பினருக்கு கருப்பை அல்லது மார்பகத்தில் Scan எடுக்க வேண்டி இருந்தால் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் தீர்மானம் இயற்றப்பட்டு குழுவில் கலந்து கொண்ட உறுப்பினர் அனைவரிடமும் கையொப்பம் பெற்று தீர்மானப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு குழு ஊக்குனருடன் தலைமை அலுவலகம் வர வேண்டும்.

ROBOTIC அறுவைச் சிகிச்சையின் நன்மைகள்



- அதிக துல்லியத்துடன் அறுவை சிகிச்சை செய்ய முடியும்.
- சிறிய வெட்டுகள் மட்டுமே என்பதால் வலி குறைவு.
- இரத்த இழப்பு மிகக் குறைவாக இருக்கும்.
- தழும்புகள் ஏதுமின்றி, நோயாளி விரைவாக குணமடைவார்.
- அறுவைச் சிகிச்சைக்கு பின் சிக்கல்கள் குறைவு.

மருத்துவ உயர் சிகிச்சையில் கலந்து கொள்பவர்களின் கவனத்திற்கு

- புற்றுநோய் மருத்துவ உயர் சிகிச்சை பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையில் வழங்கப்படுகிறது. அறுவைச் சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை, மருந்து மற்றும் ஆய்வகச் செலவுகள் அனைத்தும் ஐ.வி.டி.பி நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது.
- சிகிச்சையின் போது நோயாளிக்கும் உடன் தங்குவோர்க்கும் மருத்துவமனையிலேயே, இலவச உணவு வழங்குவதற்கு ஐ.வி.டி.பி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.
- ஒவ்வொரு முறை பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு செல்லும் போதும், ஐ.வி.டி.பி நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு அனுமதி கடிதம் பெற்றுச் செல்வது அவசியம்.

பித்தப்பை கல் மற்றும் சிறுநீரகக் கல் உயர் சிகிச்சை பெறுவோர் சிகிச்சைக்கு தேவையான Scan உள்ளிட்ட அனைத்து மருத்துவப் பரிசோதனைகளும் வெளியில் மேற்கொண்டு, அறுவைச் சிகிச்சை தேவை என மருத்துவர் பரிந்துரைத்தால் மட்டுமே, அனைத்து Report-உடன் ஐ.வி.டி.பி. அலுவலகத்தை அணுக வேண்டும்.



ஐ.வி.டி.பி நிறுவனத்தால் வழங்கப்படும் மருத்துவச் சிகிச்சைத் திட்டங்கள்

- ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான ஆரம்ப நிலை புற்றுநோய் பரிசோதனை முகாம்
- கருப்பைப் புற்றுநோய் மற்றும் கருப்பை தொடர்பான பிற மருத்துவப் பிரச்சினைகளுக்கான சிகிச்சை
- மார்பகப் புற்றுநோய் மற்றும் மார்பகக் கட்டிகளுக்கான சிகிச்சை
- தைராய்டு கட்டிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சிகிச்சை
- பித்தப்பை கல் மற்றும் சிறுநீரகக் கல் சிகிச்சை
- உடலின் எந்தப் பகுதியில் கட்டிகள் இருந்தாலும், அதற்கான உயர்நிலை மருத்துவ சிகிச்சை
- ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் திருமணம் ஆகாத பெண் குழந்தைகளுக்கு மார்பகத்தில் ஏதேனும் கட்டிகள் மற்றும் வேறு பிற அறிகுறிகள் காணப்படும் போதும், கருப்பை சம்மந்தமான பிரச்சினைகள் இருந்தாலும் ஐ.வி.டி.பி நிறுவனத்தை அணுகினால் அவர்களுக்கு நோயின் தன்மைக்கேற்ப இலவச சிகிச்சை வழங்கப்படும்.
- ஐ.வி.டி.பி உறுப்பினர்களில் 50 வயதிற்கு குறைவாக உள்ள உறுப்பினர்களுக்கு உதடு பிளவு, விபத்து மற்றும் பிற காரணங்களால் முகத்தில் ஏதாவது குறைபாடு இருப்பின் இலவச முகச்சீரமைப்பு சிகிச்சை.

குறிப்பு : மேற்கண்ட உயர்நிலை மருத்துவச் சிகிச்சை போன்ற சிகிச்சைக்கான அனைத்து செலவுகளையும் முற்றிலுமாக ஐ.வி.டி.பி நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2026 வரை பரிசோதனை முகாமில் பங்கேற்று அனைத்து நிலைகளிலும் சிகிச்சைப் பெற்றவர்களின் விவரம்

ஆரம்பநிலை புற்றுநோய் பரிசோதனை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை	43424
HPV Positive கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை	2694
Colposcopy சிகிச்சை மேற்கொண்டோர்	1391
மார்பகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர்	34010
மார்பக Mammogram, FNAC பரிசோதனை மேற்கொண்டோர்	762
Pet Scan எடுத்தவர்கள்	90
Genetic Test மேற்கொண்டோர்	10
Abdomen மற்றும் Breast Scan எடுத்தவர்கள்	2618
Hystectomy (கர்ப்பப்பை அகற்றுதல்) சிகிச்சைப் பெற்றோர்	148
Thermalablation, Cone Biopsy சிகிச்சைப் பெற்றவர்கள்	521
மார்பகப் புற்றுநோய் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டோர்	84
கதிரியக்க மற்றும் கீமோ தெரபி சிகிச்சைப் பெற்றோர்	86
புற்றுநோய் அல்லாத பொது சிகிச்சைப் பெற்றோர்	74
தைராய்டு கட்டி நீக்கும் சிகிச்சைப் பெற்றோர்	40
ரோபோட்டிக் அறுவைச் சிகிச்சைப் பெற்ற உறுப்பினர்கள்	72
ரோபோட்டிக் அறுவைச் சிகிச்சைப் பெற்ற உறுப்பினர்களின் பெண் குழந்தைகள்	10
உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் சிகிச்சைப் பெற்றோர்	53
சிறுநீரகம் சம்பந்தமான பரிசோதனை மேற்கொள்வோர்	21
சிறுநீரகம் சம்பந்தமான அறுவை சிகிச்சைப் பெற்றோர்	3
பித்தப்பை கல் சம்பந்தமான பரிசோதனை மேற்கொள்வோர்	11
பித்தப்பை கல் சம்பந்தமான அறுவை சிகிச்சைப் பெற்றோர்	10

விவரம்	ஜனவரி 2023 முதல் மார்ச் 2026 வரை	ஏப்ரல் 2026 முதல் செப்டம்பர் 2026 வரை	மொத்தம்	
ஆரம்ப நிலை புற்றுநோய் பரிசோதனை	₹ 4.96 கோடி	₹ 80.57 இலட்சம்	₹ 5.77 கோடி	₹ 15.41 கோடி
புற்றுநோய் உயர் சிகிச்சை	₹ 7.61 கோடி	₹ 2.03 கோடி	₹ 9.64 கோடி	



ஐ.வி.டி.பி-யில் மார்பகப் புற்றுநோய் குறித்து ஸ்பர்ஷா விழிப்புணர்வு நிகழ்வு

பெண்களின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் பாதுகாப்பதில் மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு மிகவும் அவசியமான ஒன்றாகும். இதனை வலியுறுத்தும் வகையில், ஐ.வி.டி.பி நிறுவனம் சார்பில் 26.10.2026 அன்று, பெங்களூர், செயின்ட் ஜான்ஸ் தேசிய சுகாதார அறிவியல் கழகம், ஸ்பர்ஷா திட்டத்தின் கீழ், அறுவைச் சிகிச்சை நிபுணர் **Dr. ராகேஷ், HOD (Surgical Oncology)** அவர்களின் முன்னிலையில் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் 17 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான விழிப்புணர்வுடன், ஆண்களுக்கும் மார்பகப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது என்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்வில் பகிரப்பட்ட மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகள்

மார்பகத்தில் ஏற்படும் சில மாற்றங்களை அலட்சியப்படுத்தாமல் கவனிக்க வேண்டும். குறிப்பாக,

- மார்பகத்தில் கட்டி அல்லது வீக்கம் தோன்றுதல்.
- மார்பகத்தின் அளவு அல்லது வடிவத்தில் மாற்றம் ஏற்படுதல்.
- மார்பகத்தின் தோலில் சுருக்கம், பள்ளம் அல்லது சிவத்தல் காணப்படுதல்.
- மார்பகக் காம்பு (Nipple) உள்நோக்கி இழுக்கப்படுதல் அல்லது அசாதாரண மாற்றங்கள் ஏற்படுதல்.
- மார்பகக் காம்பிலிருந்து இரத்தம் கலந்த அல்லது வழக்கத்திற்கு மாறான திரவம் வெளியேறுதல்.
- அக்குள் பகுதியில் கட்டி அல்லது வீக்கம் ஏற்படுதல்.

இத்தகைய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகிப் பரிசோதனை செய்துகொள்வது அவசியம்.

மார்பக சுய பரிசோதனையின் முக்கியத்துவம்

ஒவ்வொரு பெண்ணும் தங்களது மார்பகத்தின் இயல்பான தோற்றத்தையும் தன்மையையும் அறிந்துகொள்வது அவசியம். மாதவிடாய் முடிந்த ஏழு நாட்களுக்குப் பிறகு, மார்பகத்தில் ஏதேனும் மாற்றங்கள் உள்ளனவா என்பதை கண்ணாடி முன் நின்றும், படுத்த நிலையிலும் மெதுவாகத் தொட்டுப் பார்த்தும் கவனிக்கலாம். பயம் மற்றும் தயக்கத்தைத் தவிர்த்து, அறிகுறிகள் தென்பட்டவுடன் மருத்துவ ஆலோசனை பெற வேண்டியது அவசியம்.

ஐ.வி.டி.பி ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின்

முக்கிய கவனத்திற்கு



ஐ.வி.டி.பி நிறுவனம் மூலம் வழங்கப்படும் ஆவணங்களின் பயன்பாட்டில் ஊக்குநர்களின் பொறுப்புகள்

ஐ.வி.டி.பி நிறுவனர் ஒரே நேரத்தில் அனைத்து ஊக்குநர்களையும் சந்திக்க முடியாவிட்டாலும், ஐ.வி.டி.பி நிறுவனத்தின் மூலம் கடந்த 4 முதல் 5 வருடங்களாக ஊக்குநர்களை நேரடியாக தொடர்புக் கொள்ளும் வகையில் பல ஆவணங்களை உங்களுக்கு வழங்கியுள்ளார். அவை

1. ஊக்குநர் கையேடு
2. Minute
3. Diary
4. IVDP மலர்
5. IVDP Loan Balance List

மேற்கண்ட ஆவணங்கள் ஊக்குநர்கள் யாரையும் சார்ந்து இருக்காமல், நிறுவனத்தின் அனைத்து விதமான வழிமுறைகளையும், குழு சம்மந்தப்பட்ட அனைத்து பதிவேடுகளையும் தாங்களே சுயமாக பராமரிப்பதற்காக நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனம் முன்னெடுக்கும் **"நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட வழிமுறைகள், விதிமுறைகள் மற்றும் சட்டத்திட்டங்கள்"** அனைத்தும் குழுவின் தரத்தை உயர்த்துவதற்கு மட்டுமே. உங்களின் பணிசுமையை ஏற்றும் நோக்கமோ அல்லது குழுவிற்கு ஏதேனும் பாதகம் ஏற்படுத்தும் நோக்கமோ அல்ல. இதை சரியான முறையில் பயன்படுத்துகையில் உங்களுக்கும் (குழுக்களுக்கும்), நிறுவனத்திற்கும் நேரடியான தொடர்பு இருக்கும் என்பதே இதன் முக்கிய நோக்கம்.

முக்கிய கவனத்திற்கு

1. **ஊக்குநர் கையேடு :** குழுக் கூட்ட விவரங்கள், குழுவில் நடைபெறும் அனைத்து செயற்பாடுகள் சார்ந்த மாதிரி தீர்மானப் படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் வங்கிப்பணியாளர்களிடம் ஊக்குநர்கள் தரம் உயரும் என்பதில் ஐயமில்லை.

2. **Minute:** குழுவின் தீர்மானப் புத்தகத்தை (Minute) சரியான முறையில் அந்தந்த காலக்கட்டத்திற்கு குழுக்கள் தங்களின் பொறுப்புகளைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு இப்புத்தகம் குழு நடத்துதல், பணம் போடுதல், உள்தணிக்கை (Internal Audit), ஊக்குநர் ஆய்வுக் கூட்டம், Grading List சம்மந்தப்பட்ட பக்கங்கள், GMF மற்றும் வங்கிக்கடன் செயல்பாடுகள் குறித்த முக்கியத்துவத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

3. **Diary :** ஆண்டுக்கு ஒரு முறை நிறுவனத்தால் வழங்கப்படும் இந்த நாட்குறிப்பேட்டில் குழுவிற்கு தேவையான மேம்படுத்தப்பட்ட விவரங்கள் மற்றும் நிறுவனத்தின் நலத்திட்டங்கள் சார்ந்து குழுவிற்கு தேவைப்படும் தகவல்கள் உள்ளது.

4. **IVDP மலர் :** ஐ.வி.டி.பி மலரின் வாயிலாக ஐ.வி.டி.பி நிறுவனர் நேரடியாக ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய செய்திகளை தெரியப்படுத்தும் நோக்கில் ஐ.வி.டி.பி நிறுவனத்தால் வெளியடப்படுவதே **ஐ.வி.டி.பி மலராகும்.** இதில் உறுப்பினர்கள் நலனில் மட்டுமில்லாமல், அடிதட்டு சமூக மக்களின் அன்றாட வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஐ.வி.டி.பி யின் நலத்திட்டகளைப் பற்றியும், ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கு நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட வழிமுறைகளைத் தெரியப்படுத்தும் நோக்கிலும் செய்திகள் வழங்கப்படுகிறது.

5. **IVDP Loan Balance List :** கடந்த 5 வருடமாக நிறுவனத்தால் வருடத்திற்கு ஒரு முறை வழங்கப்படும் Balance List சரிவர பயன்படுத்தி, குழுவில் வட்டி மீதம் தடைபடாமல், Overdue இல்லாமல் Loan ஐ Close செய்ய முடியும். இந்த வருடம் முதல் **IVDP Loan Balance List** விவரங்கள் குழுக்களின் புரிதலுக்காக **மஞ்சள் நிற Paper** இல் வழங்கப்படுகிறது.

உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு கையொப்பமிடுவதின் முக்கியத்துவம்



உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் நேரடியாகக் கலந்துக்கொள்ளும் போது தங்களுடைய சேமிப்பு மற்றும் அனைத்து விதமான கடன் மீதங்களைத் தீர்மானப் புத்தகம் மற்றும் உறுப்பினரின் தனி நபர் சேமிப்பு புத்தகத்திலும் சரிபார்த்து உறுதிப்படுத்திய பிறகு கையொப்பமிட வேண்டும். இந்த வழிமுறையை பின்பற்றுவதன் மூலம் உறுப்பினர்களின் கடன் வசூல் மற்றும் சேமிப்பு விவரங்களில் எந்த பிரச்சினையும், குழப்பமும் ஏற்பட வாய்ப்பில்லை.

முக்கிய கவனத்திற்கு

உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் கலந்துக் கொள்ளாத போது கையொப்பம் போடுவதில் பின்பற்ற வேண்டியவை :



- உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் கலந்துக் கொள்ளாத பட்சத்தில் குழுக் கூட்டத்தின் போதே, அவர்களின் பெயருக்கு நேராக **Absent** என்று பதிவு செய்ய வேண்டியது கட்டாயம். உறுப்பினர்கள் கையொப்பமிடும் இடத்தைக் காலியாக விடக்கூடாது.
- **குறிப்பு : உறுப்பினர்களிடம் குழுக் கூட்டத்திற்கு முன்பாகவோ (அ) குழுக் கூட்டத்திற்கு பின்னரோ கையொப்பம் வாங்குவது நிறுவனத்தின் விதிமீறலில் அடங்கும்.**
- **ஒரு உறுப்பினரின் கையொப்பத்தை வேறு ஒருவர் போடுவது சட்ட ரீதியான தண்டனைக்குரிய செயலாகும்.**

உறுப்பினர்களின் சூழ்நிலைகளைக் கருதி நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் TAB பயன்பாட்டின் புதிய வழிமுறைகள் :

- குழுக் கூட்டத்தில் கலந்துக் கொள்பவர்கள் மட்டும் கைரேகை வைத்தால் போதுமானது.
- வெளியூரில் தங்கியிருக்கும் மற்றும் தொடர்ந்து பணிக்கு செல்லும் உறுப்பினர்களின் வேண்டுகோளிற்கிணங்க, தற்போது அவர்கள் 6 குழுக்கூட்டத்திற்கு 1 குழுக்கூட்டத்திலாவது கலந்துக் கொள்வது கட்டாயம்.

TAB Entry மூலம் ஊக்குநர்கள் நிறுவனத்திற்கு நேரடியாக உறுதிப்படுத்தும் தகவல்கள் :

- நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட நேரத்தில் குழு நடந்தது.
- குழுவில் கலந்துக் கொண்ட உறுப்பினர்களின் வருகை
- குழுவில் வசூலான மொத்தத் தொகை
- **Denomination**
- குழுக் கூட்ட வசூலில் **Overdue Pending** உள்ளதா (அ) இல்லையா என்ற உறுதிப்படுத்தல்.
- வங்கிக்கு பணம் செலுத்த செல்பவரின் விவரம்



கைரேகை விழாத உறுப்பினர்களுக்காக நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள்



முதல் வகை : 45 முதல் 55 வயதிற்குட்பட்ட உறுப்பினர்களுக்கு ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கைரேகை விழாத பட்சத்தில், நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கும் விதத்தில் குழுவின் தீர்மானப் புத்தகத்தில் 2 வரி தீர்மானம் நிறைவேற்றி, தங்கள் குழுவின் களப்பணியாளர் **Whatsapp** இல் **Photo** மூலம் தெரியப்படுத்தினால் உடனடியாக சரிசெய்து தரப்படும்.

இரண்டாம் வகை : 60 வயதிற்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்கு இயற்கையாகவே 10 விரல்களிலும் கைரேகை கைரேகை விழாத பட்சத்தில், **ஊக்குநர் கையேட்டில் பக்க எண் : 34இல்** உள்ளவாறு பூர்த்தி செய்து, தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்தால் உடனடியாக சரிசெய்து தருவதுடன், எதிர்காலத்தில் அந்த குறிப்பிட்ட உறுப்பினர் கைரேகை வைக்காமல் குழுக்கூட்டத்தில் கலந்துக் கொள்ள அனுமதி வழங்கப்படும்.

முக்கிய கவனத்திற்கு

சுகாதாரப் பொருள் கடன் பெறும் போது ஊக்குநர்கள் பின்பற்ற வேண்டியவை

- ஊக்குநர்கள் குழுவில் எந்த வகையான கடன் பெற்றாலும் (சங்கக்கடன், வங்கிக்கடன், ஐ.வி.டி.பி கடன் மற்றும் சுகாதாரக் கடன்) குழுவின் தீர்மானப் புத்தகத்தில் **(Minute) பக்க எண் : 257 முதல்** உள்ள **Acquittance** பக்கத்தில் பதிவு செய்து கையொப்பமிட வேண்டும்.
- உள்தணிக்கை **(Internal Audit)** பக்கத்திலும் பதிவு செய்ய வேண்டியது கட்டாயம்.
- ஐ.வி.டி.பி கிளை அலுவலகங்களில் குழுக்கூட்டம் தொடர்பாகவும், சுகாதாரப் பொருட்கள் **DD** எடுப்பது போன்ற பல்வேறு பண பரிவர்த்தனைக்காக **Withdrawl** வழங்கும் போது அதில் சரியான விவரத்தை (பொருளின் பெயர், எண்ணிக்கை, தொகை) **Fill** செய்யாமல் வழங்கக் கூடாது என்பது மிகவும் முக்கியம்.

முக்கிய குறிப்பு : நீங்கள் கொடுக்கும் **Withdrawl**-வின் மூலமாக மட்டுமே **Bank** இல் அனைத்து பண பரிவர்த்தணைகளும் நடைபெறும் என்பதைக் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டியது முக்கியமானதாகும். ஆகையால் **Withdrawl** தொலைந்துவிட்டது என்று **IVDP** பணியாளர்கள் கேட்டாலும், உங்களது **Minute** இல் எழுத்துப்பூர்வமாக புதிய **Withdrawl** பெற அவர்கள் **Request** செய்தால் மட்டுமே வழங்க வேண்டும். ஏற்கனவே இதைப் பற்றிய அறிவுரையை நாங்கள் அவர்களுக்கு வழங்கியுள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

★ உறுப்பினர்களின் கவனத்திற்கு

LG

LG பொருட்கள் – இறக்கியதும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

ஐ.வி.டி.பி உறுப்பினர்கள், ஐ.வி.டி.பி கடன் மூலம் வழங்கப்படும் பொருட்களான Fridge, Washing Machine, LED TV போன்றவற்றை இறக்கியவுடன் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

- LG பொருட்களான Fridge, Washing Machine வந்த உடனே Open செய்து பார்க்க வேண்டும். ஆனால் LED TV-ஐ பாதுகாப்பான இடத்தில் வைத்து, LG Service-இல் இருந்து ஆட்கள் வரும் வரை பிரிக்கக் கூடாது.
- Fridge, Washing Machine வந்த உடனே ON செய்யக்கூடாது.
  1 நாள் கழித்த பிறகே ON செய்ய வேண்டும்.
- LG பொருட்கள் வரும் அட்டையை (Cotton Box) தூக்கிப் போடக்கூடாது.
  1 வருடம் வரை பாதுகாப்பாக வைக்கவும்.
- ஏதேனும் சந்தேகம் அல்லது புகார்கள் இருந்தால் உடனடியாக தலைமை அலுவலகத்தைத் தொடர்புக் கொள்ளவும். தொடர்புக்கு : **04343 – 232129, 04343 – 236420**

ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின் கவனத்திற்கு



ஐ.வி.டி.பி. நலத்திட்டங்களைப் பெறுவதற்கான விதிமுறைகள் மற்றும் வழிமுறைகள்

ஐ.வி.டி.பி நிறுவனம், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் குழந்தைகளை ஊக்குவிக்கவும், உறுப்பினர் குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் ஐ.வி.டி.பி கீழ்க்கண்ட நலத்திட்டங்களை உறுப்பினர்களுக்காக மட்டும் செயல்படுத்தி வருகிறது.

- **கோசலை விருது**
- **வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி**
- **விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை**
- **ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவச உயர்சிகிச்சை**

- இந்த நலத்திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்கு உறுப்பினர்கள் சில முக்கியமான விதிமுறைகளையும் நடைமுறைகளையும் முறையாகப் பின்பற்ற வேண்டும்.

அனைத்து நலத்திட்டங்களையும் உறுப்பினர் பெறுவதற்கான முக்கிய விதிமுறைகள்

- உறுப்பினர் சுய உதவிக்குழுவில் சேர்ந்து **மூன்று ஆண்டுகள்** நிறைவடைந்திருக்க வேண்டும்.
- உறுப்பினர் குழுவில் **தொடர்ந்து கலந்துக் கொண்டிருக்க** வேண்டும்.
- குழுவிலும், உறுப்பினர் பெயரிலும் **Late Payment and Over Due** இல்லாமல் இருக்க வேண்டும்.
- குழுக்கள் **அனைத்து பயிற்சிகளிலும்** கலந்துக் கொள்ளுதல் அவசியம்.
- நலத்திட்டத்தில் பயனடையும் உறுப்பினர் **சங்கக் கடன் மற்றும் வங்கிக் கடன்** பெற்றிருக்க வேண்டும். (குழு உறுப்பினர்களும் கடன் பெற்றிருத்தல் அவசியம்)
- நலத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கும்போது **தேவையான அடையாளச் சான்றுகள்,** (முகவரிச் சான்று, வங்கிக் கணக்கு விவரங்கள்) மற்றும் திட்டம் தொடர்பான சரியான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

நிறுவனத்தின் விதிமுறைகளை முறையாகப் பின்பற்றினால் நலத்திட்டங்களின் பயன்களைப் பெறமுடியும்

வடகிழக்கு மாநிலப் பள்ளிகளுக்கு

ஐ.வி.டி.பி.யின்

கல்விப் பணிகள்

₹ 19.86 இலட்சம்



மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும், தரமான கல்வியை ஊக்குவிக்கவும் ஐ.வி.டி.பி நிறுவனம் தொடர்ந்து பல்வேறு கல்வி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இக்கல்வியாண்டிலும் மேகாலயா மாநிலத்தில் செயல்பட்டு வரும் பள்ளிகளுக்குத் தேவையான கல்வி உபகரணங்கள் மற்றும் கற்றல் வளங்கள் வழங்கப்பட்டன.



இதுவரை வட கிழக்கு மாநிலப் பள்ளிகளுக்காக வழங்கப்பட்ட மொத்தக் கல்விப்பணியின் மதிப்பு ₹ 1.78 கோடி

மேகாலயா மாநிலத்தில்,
மக்கன்ரூ கிராமத்தில் செயல்படும்
ஹோலி கிராஸ் மேல்நிலைப் பள்ளி
730 மாணவ மாணவியருக்கு
குளிர்கால உடைகள் (Jerkins)
₹ 5.34 இலட்சம்
2 இன்டராக்டிவ் போர்டுகள்
₹ 2.24 இலட்சம்

மேகாலயா மாநிலத்தில் செயல்படும்
குட் செப்பர்டு மேல்நிலைப் பள்ளி
1200 மாணவ மாணவியருக்கு
குளிர்கால உடைகள் (Jerkins)
₹ 8.82 இலட்சம்
3 இன்டராக்டிவ் போர்டுகள்
₹ 3.36 இலட்சம்

கிருஷ்ணகிரி IELC நடுநிலைப் பள்ளிக்கு மேற்கூரைத் தகடு ₹ 33 ஆயிரம்

கிருஷ்ணகிரி, IELC நடுநிலைப் பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களின் கல்வித் தரம் உயர வேண்டும் என்ற நோக்கத்தில், ₹ 33,000 மதிப்பில் மேற்கூரைத் தகடு அமைத்து ஐ.வி.டி.பி நிறுவனம் உதவியது.

கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கான
கல்வி மேம்பாட்டுப் பணிகள்

₹ 6.77 இலட்சம்



ஐ.வி.டி.பி நிறுவனத்தால் தொடங்கப்பட்ட கோட்டையூரில் செயல்பட்டு வரும் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியில், மலைவாழ் மற்றும் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள் தரமான கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் ஐ.வி.டி.பி நிறுவனம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

2026-2027 கல்வியாண்டிலும் அப்பள்ளியில் பயிலும் 487 மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ரூ. 6.77 இலட்சம்.

இதுவரை ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கு ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கிய மொத்த கல்விப் பணியின் மதிப்பு ரூ. 7.08 கோடி.

கல்லூரிகளுக்கு 6 இன்ட்ராக்டிவ் போர்டுகள்
(INTERACTIVE DISPLAY BOARD)

₹ 6.73 இலட்சம்

ஐ.வி.டி.பி. நிறுவனம் கல்வித் துறையின் வளர்ச்சியை ஊக்குவித்து, டிஜிட்டல் கல்வி முறையை வலுப்படுத்தும் நோக்கில், 2026–2027 ஆம் கல்வியாண்டில் கல்லூரிகளுக்கு மொத்தம் **ரூ. 6.73 இலட்சம்** மதிப்பீட்டில் 6 இன்ட்ராக்டிவ் போர்டுகளை வழங்கியுள்ளது.



சிவகங்கை மாவட்டம், சருகனி, இதயா மகளிர் கல்லூரிக்கு
2 இன்டராக்டிவ் போர்டுகள்
₹ 2.24 இலட்சம்

தூத்துக்குடி மாவட்டம், கீழ் இரால், தொன் போஸ்கோ கல்லூரிக்கு
2 இன்டராக்டிவ் போர்டுகள்
₹ 2.24 இலட்சம்

சேலம், ஜெயராணி மகளிர் கல்லூரிக்கு
2 இன்டராக்டிவ் போர்டுகள்
₹ 2.24 இலட்சம்

இதுவரை பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்ட்ராக்டிவ் போர்டுகள் வழங்கியதிற்காக ஐ.வி.டி.பி செலவிட்டத் தொகை ரூ. 78.70 இலட்சம்



கல்லூரியில் பயிலும் 2593 மாணவியருக்கு சீருடைகள்

₹16.50 இலட்சம்

நாளைய சமுதாயத்தின் முதுகெலும்பாகத் திகழும் மாணவ, மாணவரிடையே பொருளாதார அடிப்படையில்; ஏற்றத்தாழ்வுகளின்றி, சமத்துவ மனப்பான்மையுடன் கல்லூரிக்கு வரும் பொருட்டு சீருடைகளை ஐ.வி.டி.பி தலைவர் இராமன் மகசேசே குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கி உதவினார்.

நாமக்கல், பான் செக்கர்ஸ் கல்லூரியின்
478 மாணவிகளுக்கு - ₹ 2.83 இட்சம்

கிருஷ்ணகிரி, அரசு மகளிர் கலைக் கல்லூரியின்
இரண்டாமாண்டு மற்றும் மூன்றாமாண்டு பயிலும்
915 மாணவியருக்கு - ₹ 7.23 இட்சம்

புதுப்பாளையம், இதயா கல்லூரியின்
650 மாணவியருக்கு - ₹ 3.45 இட்சம்

விரியூர், இம்மாகுலேட் கல்லூரியில் பயிலும்
550 மாணவிகளுக்கு - ₹ 2.97 இட்சம்

இதுவரை சீருடைகள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கியதற்காக ஐ.வி.டி.பி. செலவிட்ட தொகை ₹ 70.77 இலட்சம்

எலத்தகிரி, கொன்சாகா கல்லூரிக்கு உடற்பயிற்சிக் கூட (Gym) உபகரணங்கள்

₹ 2.87 இலட்சம்



கல்வி என்பது அறிவை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், உடல் மற்றும் மன ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவதாகும். அந்த வகையில், எலத்தகிரி, கொன்சாகா கல்லூரி மாணவர்களின் உடல் நலத்தையும் உடற்பயிற்சி ஆர்வத்தையும் ஊக்குவிக்கும் நோக்கில், அக்கல்லூரியின் உடற்பயிற்சிக் கூடத்திற்குத் தேவையான (Gym) உபகரணங்களை **₹ 2.87 இலட்சம்** மதிப்பில் வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி நிறுவனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட மைய

நூலகத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம்

₹ 1.53 இலட்சம்

கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் உயரிய நோக்கத்துடன் செயல்பட்டு வரும் ஐவிடிபி நிறுவனத்தின் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டப் பொதுநூலகத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்காக ₹ **1.53 இலட்சம்** மதிப்பில் **ஜெராக்ஸ் இயந்திரம்** வழங்கப்பட்டது.



இதுவரை மாவட்ட மைய நூலகத்தின் வளர்ச்சிக்காக ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்ட தொகை ₹ 17.54 இலட்சம்.

ஆசிரியர்களைப் பாராட்டும் வகையில் ஆசிரியர் தினவிழாவில் ஊக்கப்பரிசுகள்

ரூ. 3.21 இலட்சம்



ஐ.வி.டி.பி நிறுவனம், கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையைப் பாராட்டும் வகையில், ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு ஊக்கப்பரிசுகளை வழங்கி ஊக்குவித்தது.

இதுவரை ஆசிரியர்களின் நலனுக்காக ஐ.வி.டி.பி. செலவிட்ட தொகை ₹ 1.47 கோடி

- கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியின் 54 ஆசிரியர்களுக்கு Ideal Hot Boxs ₹ 58,860/-
- கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியின் 100% தேர்ச்சி விகிதத்தை கொடுத்த 8 ஆசிரியர்களுக்கு தலா 1Gm Gold Coin ₹ 76,200/-
- கிருஷ்ணகிரி ஆர்.சி பாத்திமா ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் 56 ஆசிரியர்களுக்கு Ideal Hot Boxs ₹ 61,040/-
- கோட்டையூர், ஐ.வி.டி.பி நேதாஜி மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர்களுக்கு சுற்றுலா பயணம் ₹ 75,000/-
- சென்னை, மாண்போர்ட் மே.நி.பள்ளியின் 13 ஆசிரியர்களுக்கு Dinner Set ₹ 50,000/-



₹ 7.57 இலட்சம்

10,536 பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு

இனிப்பு & கேக்குகள்

ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனத்தின் பள்ளி மாணவர்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில், ஆசிரியர்கள் தினம் மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற நிகழ்வுகளை முன்னிட்டு, இவ்வாண்டும் மாணவர்களின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் வகையிலும், மாணவர்களிடையே அன்பு, பகிர்வு மற்றும் ஒற்றுமை உணர்வையும் எடுத்துரைக்கும் நோக்கிலும் கேக்குகள் வழங்கப்பட்டன. **இத்திட்டத்தின் மூலம் 10,536 பள்ளி மாணவர்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பயனடைந்தனர். இதன் மதிப்பு மொத்தம் ரூ.7.57 இலட்சமாகும்.**

கிருஷ்ணகிரி, ஆர்.சி பாத்திமா ஆண்கள் மே.நி. பள்ளியின்
1948 மாணவர்களுக்கு ₹ 97,402/-

கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியின்
3993 மாணவிகளுக்கு ₹ 2.26 இலட்சம்

கிருஷ்ணகிரி IELC நடுநிலைப் பள்ளியின்
175 மாணவ, மாணவிகளுக்கு ₹ 8,750/-

கோட்டையூர், ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியின்
490 மாணவர்களுக்கு ₹ 29,380/-

கீரனூர், தொன் போஸ்கோ இளைஞர் கிராமத்தைச் சார்ந்த
380 மாணவர்களுக்கு ₹ 18,600/-

கோசலை விருது வழங்கும் விழாவில்
2500 நபர்களுக்கு ₹ 2.96 இலட்சம்

பள்ளி மற்றும் கல்லூரிகளைச் சார்ந்த **1050 மாணவ மாணவியருக்கு உணவு ₹ 80,300/-**

இதுவரை இனிப்பு மற்றும் கேக்குகள் வழங்கியதற்காக ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்ட மொத்த தொகை ₹ 33.60 இலட்சம்.



கிருஷ்ணகிரி, ஆர்.சி. பாத்திமா பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டுமானம்

₹ 7.29 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம், கல்வியே ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் என்பதை உணர்ந்து, கிருஷ்ணகிரி ஆர்.சி. பாத்திமா பள்ளியில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், மாணவர்கள் பாதுகாப்பான, தூய்மையான மற்றும் விசாலமான வகுப்பறைகளில் கல்வி கற்க சிறந்த கற்றல் சூழலை உருவாக்குவதற்கும் புதிய வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொண்டது.
இக்கட்டுமானப் பணிக்காக ஐ.வி.டி.பி நிறுவனம் மொத்தம் ரூ. 7.29 இலட்சம் செலவிட்டுள்ளது.



குடிசைத் தீ விபத்து நிவாரண நிதியுதவி

₹ 75,000

ஐ.வி.டி.பி நிறுவனம், குடிசைத் தீ விபத்தால் பாதிக்கப்படும் உறுப்பினர்களின் குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத்தையும், அத்தியாவசியப் பொருட்களையும் இழந்து தவிக்கும் சூழ்நிலைகளில், அவர்களின் அவசர உதவிக்காக தலா ₹ **25,000** நிவாரண நிதியுதவியாக வழங்கி வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுவைச் சார்ந்த **3** உறுப்பினர்களுக்கு மொத்தம் ₹ **75,000** வழங்கி உதவியது.

ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுக்கள் விவரம்

செப்டம்பர் 2026 வரை

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள்
- கிருஷ்ணகிரி
- தர்மபுரி
- திருப்பத்தூர்
- வேலூர்

ஐ.வி.டி.பி. கிளைகள்
84
சுய உதவிக்குழுக்கள்
13940

ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்கள்
2,51,979

ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு
₹1814.67 கோடி

ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு
₹1098.85 கோடி

கடன் விவரம்

விவரம்	மார்ச் 2026 வரை	ஏப்ரல் – செப்டம்பர் 2026	இதுவரை மொத்தம்
ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை	₹ 9,863.40 கோடி	₹ 645.00 கோடி	₹ 10,508.40 கோடி
ஐ.வி.டி.பி. குழுக்கள் உள் கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை	₹ 5,388.11 கோடி	₹ 135.06 கோடி	₹ 5,523.17 கோடி
ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை	₹ 526.77 கோடி	₹ 56.79 கோடி	₹ 583.56 கோடி
ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை	₹ 295.90 கோடி	₹ 7.51 கோடி	₹ 303.41 கோடி
மொத்தம்	₹ 16,074.18 கோடி	₹ 844.36 கோடி	₹ 16,918.54 கோடி

மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

விவரம்	மார்ச் 2026 வரை	ஏப்ரல் – செப்டம்பர் 2026	இதுவரை மொத்தம்
கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக	₹ 5.00 கோடி	₹ -	₹ 5.00 கோடி
கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்)	₹ 2.00 கோடி	₹ -	₹ 2.00 கோடி
மருத்துவமனை, சிறைகள் தொழுநோயாளிகள். முதியோர் இல்லம். கடைநிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு	₹ 3.64 கோடி	₹ 1.73 இலட்சம்	₹ 3.66 கோடி
மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி	₹ 75.49 கோடி	₹ 3.50 இலட்சம்	₹ 75.53 கோடி
உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள் : குடிசை தீ விபத்து நிதியுதவி, கோசலை விருது, ஊக்குநர் பரிசு, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம் பரிசுகள், தையல் பயிற்சிகள் & கணினி பயிற்சி, வெள்ள நிவாரணப் பணி, விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை	₹ 14.03 கோடி	₹ 1.69 கோடி	₹ 15.72 கோடி
பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை, மருத்துவச் செலவுகள்	₹ 10.58 கோடி	₹ 28.22 இலட்சம்	₹ 10.86 கோடி
ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி, கோட்டையூர், ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் பயிற்சி மையம். அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக	₹ 18.26 கோடி	₹ 6.77 இலட்சம்	₹ 18.32 கோடி
பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது.	₹ 29.64 கோடி	₹ 70.02 இலட்சம்	₹ 30.34 கோடி
குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி	₹ 68.15 இலட்சம்	₹ -	₹ 68.15 இலட்சம்
கார்கில் போர். குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா. நீலகிரி, சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக	₹ 4.91 கோடி	₹ -	₹ 4.91 கோடி
கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி	₹ 3.72 கோடி	₹ -	₹ 3.72 கோடி
இருளர் நிவாரணப் பணிகள்	₹ 1.22 கோடி	₹ -	₹ 1.22 கோடி
ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் புற்றுநோய் பரிசோதனை மற்றும் மருத்துவச் சிகிச்சைக்காக	₹ 12.57 கோடி	₹ 2.84 கோடி	₹ 15.41 கோடி
மொத்தம்	₹ 181.74 கோடி	₹ 5.63 கோடி	₹ 187.37 கோடி

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் மாவட்டங்கள்

9ஈ சாந்தி நகர் 3ஆவது கிராஸ், கிருஷ்ணகிரி – 635001, தமிழ் நாடு, இந்தியா.

04343-232 129, 236 420 francis@ivdpkrishnagiri.org www.ivdpkrishnagiri.org